RECEIVED
Periodicals Division
Library

விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 ஆனி: 9 துல் ஹஜ்தா: பிறை: 29 இதழ்: 130
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 23-06-1990

## நாடு பூராவும்
# 86 அகதி முகாம்களில்
# 2 லட்சம் மக்கள் தஞ்சம்

## அநுராதபுரத்தில் தமிழ் மக்கள் தவிப்பு

(கொழும்பு)

**நாட்டின் பல பகுதிகளில் கடந்த ஒரு வார காலத்தில் நிகழ்ந்த தாக்குதல் சம்பவங்களையடுத்து இரண்டு லட்சத்திற்கும் மேலாக மக்கள் அகதிகளாகியுள்ளனர்.**

கொழும்பு உட்பட, நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் 86 அகதி முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு அகதி முகாமிலேயே ஆகக்கூடியதாக 80,000 பேர் அகதிகளாக உள்ளனர்.

பல்வேறு முகாம்களிலும் உள்ள அகதிகளின் எண்ணிக்கை.

| இடங்கள் | முகாம்கள் | அகதிகள் |
|---|---|---|
| மட்டக்களப்பு | 12 | 80,000 |
| அம்பாறை | 16 | 24,681 |
| திருமலை | 14 | 26,000 |
| பொலநறுவை | 01 | 300 |
| மன்னர் | 13 | 48,509 |
| கொழும்பு | 05 | 751 |
| அநுராதபுரம் | 01 | 400 |
| யாழ்ப்பாணம் | 24 | 24,500 |

மற்ற இடங்களிலிருந்து யாழ்ப்பாணத்துக்கு புறப்பட்டவர்கள் போக்குவரத்து வசதியின்றி அநுராதபுரம் முகாமில் தங்கியுள்ளனர்.

கல்முனை ஸாகிராக் கல்லூரியில் சுமார் 10,000 பேர் அகதிகளாகியுள்ளனர். [அ]

## புலிகள் மறுப்பு!

(யாழ்ப்பாணம்)

ஈ. பி. ஆர். எல் எவ். தலைவர்களின் படுகொலைகளுக்குத் தாம் பொறுப்பல்ல என்றும், இக் கொலைகளுக்கு பின்னல் உட்பூசல் இருந்தமையே காரணமாகும் என்றும், விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணியின் செயற்குழு நேற்று விடுத்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

## அகதிகளுக்கு ஒருவார உணவு

[யாழ்ப்பாணம்]

யாழ். நகரப் பகுதியில் அமைக்கப்பட்டுள்ள 24 அகதிகள் முகாம்களில் தஞ்சமடைந்துள்ள 4,500 பேருக்கு நிவாரணம் வழங்குவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அகதி முகாமிலுள்ளவர்களுக்கு எதிர்வரும் திங்கட்கிழமை முதல் ஒருவாரத்திற்கு உரிய உணவுப் பொருள்கள் வழங்கப்படும்.

## யாழ்.கோட்டை முகாம்
# நள்ளிரவு புலிகளால் இடைவிடாது தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

விடுதலைப் புலிகளினுல் கடந்த ஒருவார காலத்துக்கு மேலாக சுற்றி வளைக்கப்பட்டிருந்த யாழ். கோட்டை நேற்று நள்ளிரவு 11-20 மணிக்கு கடும் தாக்குதல்களுக்கு உள்ளானது.

கடந்த இரண்டு தினங்களாக ஏதோ ஒருவித தொய்வு நிலையிலிருந்த யாழ்.கோட்டை முகாம் சுற்றிவளைப்பு நேற்று இரவு விடுதலைப் புலிகளினுல் தாக்குதலுக்கு உள்ளானது.

பயங்கர மோட்டோர் ஷெல் தாக்குதல்களும் சரமாரியான துப்பாக்கி வேட்டுக்களும் தீர்க்கப்பட்டுக் கொண்டே இருந்தன. (அ)

## யாழ். கோட்டைமுகாமில்
# 100 இராணுவத்தினரும், 50 பொலிஸாரும் முடக்கம்!

[கொழும்பு]

யாழ். கோட்டை முகாமுக்குள், சுமார் 100 இராணுவ வீரர்களும், 50 பொலிஸாரும் முடங்கிக் கிடக்கிறுர்கள் என்று அரச இராணுவ வட்டாரங்களிலிருந்து அறியப்படுகிறது.

இவர்களுக்குத் தேவையான அத்தியாவசிய உணவு பொருட்களை வழங்கமுடியாதபடி விடுதலைப்புலிகள் கடும் தாக்குதல்களை நடாத்திவருவதை இலங்கை இராணுவ உயர் அதிகாரி ஒப்புக்கொண்டுள்ளார்.

## கார்மீது ஹெலி தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

வல்லைவெளியால் சென்ற கார் ஒன்றின்மீது ஹெலித் [illegible] கார் பலத்த சேதமடைந்த தாகத் தெரியவருகிறது.

(153)

# யாழ். ஆஸ்பத்திரி
# இரு தினங்களில் இயங்கும்

## சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை

[யாழ்ப்பாணம்]

சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் குழு நேற்று யாழ்ப்பாணம்வந்து பல்வேறு பாதுகாப்பு, திணைக்கள அதிகாரிகள் அத்தியாவசிய சேவை அதிகாரிகளைத் தனித்தனியாக சந்தித்து ஆலோசனை நடத்தியுள்ளது.

இக் குழுவினர் ஜனுதிபதியை இன்று சந்தித்து நிலைமைகளை விளக்குவதுடன் இருதினங்களில்யாழ்ப்பாணம் போதனு வைத்தியசாலை. கிளிநொச்சி வைத்தியசாலைகளை மீண்டும் திறக்க நடவடிக்கை எடுப்பதுடன், யாழ். மாவட்ட உணவுக் களஞ்சியத்திலிருந்து உணவுப் பொர்ருள்களை விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்துள்ளார். [ச]

## ஈரான் பூகம்பம்:
## 35,000 பேர்பலி
## 30,000 பேர்காயம்

(தெஹீரான்)

ஈரானின் வடமேற்கு பகுதியில் ஏற்பட்ட பூகம்பத்தினுல் சுமார் 35,000 பேர் கொல்லப்பட்டும், மேலும் 30,000 பேர் காயமடைந்ததாக ஈரானின் அதிகார பூர்வமான செய்தித்ஸ்தாபனம் அறிவித்துள்ளது. (அ)

# மலையக தோட்டத் தொழிலாளர்கைது
## தொண்டமான் கண்டனம்

(கொழும்பு)

வடக்கிலும், கிழக்கிலும் கலவரங்கள் உருவாகும்போது எல்லாம் இலங்கையின் மத்திய பகுதிகளில் வாழும் தமிழ் பேசும் தோட்டத் தொழிலாளர்களைக் கைசெய்வது, இலங்கை அரசாங்கத்திற்கு ஒரு வழக்கமாகிவிட்டதுஎன்று அமைச்சர் திரு. எஸ். தொண்டமான் அரசாங்கத்தை சாடியுள்ளார்.

வடக்கிலும், கிழக்கிலும் நடக்கும் வன்முறைச் சம்பவங்களும், மோதல்களும், தமிழ் மக்களுக்கு எதிரானவையல்ல என்று அரசு அடிக்கடி சொல்லிக்கொண்டே வருகிறது. ஆனுல் தோட்டத்தொழிலாளர்கள் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்படுவதைப் பார்த்தால் அரசாங்கம், தமது கருத்தை எப்போதோ வாபஸ் பெற்றுவிட்டது என்றே கருத வேண்டியுள்ளது.

தமிழ்பேசும் தோட்டத் தொழிலாளர் மத்தியில் பீதியை பாதுகாப்பற்ற சூழ்நிலையை உருவாக்கியுள்ள இன்றைய நிலையில் சிங்கள மக்கள் மத்தியிலும் அரசின்மீதும் பெருத்த சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளது. (அ)

## நிந்தாவூரில் 62 முஸ்லிம்கள் சுட்டுக் கொலை

(யாழ்ப்பாணம்)

அம்பாறை மாவட்டம் நிந்தாவூர் கிராமத்தில் 62 முஸ்லிம் மக்களை இலங்கை இராணுவத்தினர் சுட்டுக் கொன்றுள்ளதாக நிந்தாவூர் பொதுமக்கள் தெரிவித்திருப்பதாக வெரிஸ்தாஸ் வானெலி இன்று காலை அறிவித்தது. (153)

## மன்னர் முகாம் தாக்குதல்
# 7 படையினர் பலி; கவச வாகனம் ஆயுதங்கள் மீட்பு
## 12 புலிகள் வீரமரணம்

(மன்னர்)

கஜபாம் இராணுவ முகாம் புலிகளிடம் வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து புலிகள் அம்முகாமை பூரண கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்துள்ளனர்,

சேதமடைந்த பவல் கவச வாகனமொன்றும், பெருந்தொகையான ஆயுதங்களையும் புலிகள் கைப்பற்றியுள்ளனர்.

12புலிகள் வீரமரணமடைந்துள்ளனர்.

சுமார் 20 இராணுவத்தினர் முகாமை விட்டு தாக்குதலின்போது தப்பிச்சென்றனர். 7 இராணுவத்தினர் பலியாகினர்;

புலிகளால் இம் முகாமில் கைப்பற்றப்பட்ட ஆயுதங்களின் விரம் 30 கலிபர் 2, ரவைகள் 3500, ஆர். பி; ஜி; எல். எம். ஜ். 1, ரவைப் பெட்டி 10, 60 எம். எம். மோட்டர் 1, ஷெல் 30, சொட்கன் 116, ரி 56-5 வகை 5, ரி 56-1 வகை 3, ரி 18 வகை 1, ஆர். பி. ஜி. 2 ஷெல் 27, ஜே. ஆர். கிரனேட் 25; எம். ஐ ரவைகள் 10,600, பவல்வாகனம் ஒன்று,

இத் தாக்குதலில் மேஜர் ராசன், காப்டன் தனபால், லெப். சுகமணி, லெப். கோபிநாத், சாந்தி, ரமணி, சுமித்திரன். பயிஸ், பாஞ்சால் மேனன் டிக்கஞ்சி குபேரன் ஆகிய புலிப் போராளிகள் வீரமரணமடைந்துள்ளனர்; புலிகள் தமது வீர வணக்கத்தை தெரிவித்துள்ளனர்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரி விளம்பரம்

### விற்பனைக்கு

திருநெல்வேலியில் 18 பரப்பு தோட்டக்காணி நீர் வசதியுடன் உடன் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு:- ஹோட்டல் சுபாஸ், யாழ்ப்பாணம். (சி- 4002)

ஒல்லாந்திலிருந்து இறக்குமதி செய்த (Crimson Globe) பீற்றூட் விதை விவசாய ஆய்வுகூட அனுமதிபெற்றது. உயர் விளைச்சல் தரவல்லது. 200 கிறும் டின் ரூபா 150-00. தேவைக்கு பிள்ளையார், 259, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம். (சி-3986)

UNIVERSITY OF JAFFNA

# TENDER NOTICE

## SUPPLY OF AIR CONDITIONERS

Sealed Tenders are invited for the supply of air conditioners at the following locations;

1. Medical Faculty:-
   a. Department of Physiology 01 No.
   b. Department of Pathology 01 No.
   c. Department of Bio-Chemistry 01 No
   d. Department of Anotomy 01 No.
   e. Medical Faculty Library 01 No.
   f. Medical Faculty Board Room 01 No.
2. Library 02 Nos.
3. Finance Branch 01 No.
4. Department of Maths-Computer Unit 01 No.
5. Computer Unit 03 Nos.

The Tenders should be forwarded to the Registrar, University of Jaffna by registered post or Personally with the mark "Tender for the Supply of Air Conditioners" to reach him on or before the 9th July 1990 at 10 a. m.

Tenders will be opened on the same day at 10-30 a. m.

REGISTRAR
(A 811)

## நயினை உற்சவம் ஒத்திவைப்பு

[யாழ்ப்பாணம்]

நயினாதீவு நாகபூஷணி அம்மன் வருடாந்த மஹோற்சவம் காலவரையின்றி பின்போடப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் நடைபெற்ற அறங்காவலர் சபைக் கூட்டத்தீர்மானப்படி இம் முடிவு எடுக்கப்பட்டது.

இன்று சனிக்கிழமை ஆரம்பமாகி ஜூலை மாதம் 8ந் திகதி முடிவடைய வேண்டிய நயினாதீவு நாகபூஷணி வருடாந்த மஹோற்சவம் நாட்டுநிலைமை காரணமாக காலவரையின்றி பின்போடப்பட்டுள்ளது. (153)

# "ஆசிரியர்கள் பணத்துக்காக 'ரியூசன்' நடத்தக்கூடாது"

(நாவற்குழி)

"ஆசிரியர்கள் தொடர்ந்து பயின்று தங்கள் தரத்தைக் கூட்டிக்கொள்ளவேண்டும். அத்தோடு ஆசிரியர்கள் பணத்துக்காக ரியூசன் நடாத்தக் கூடாது பணம்வேண்டுமெனில் வீட்டுக்குப்பின்னால் தோட்டம் செய்துதேடிக்கொள்ளலாம்."

இவ்வாறு வடமாநிலக் கல்விப்பணிப்பாளர் இரா சுந்தரலிங்கம் தொலைக்கல்விப் பயிற்சியின் இரண்டாம் வருட மாணவர்களுக்கான கலந்துரையாடலின்போது தெரிவித்தார்.

யாழ். மாவட்ட தொலைக் கல்விப் பிரிவின் சிரேஷ்ட விரிவுரையாளர் திரு. ம. செ. அலெக்ஸாந்தர் தலைமையில் நடைபெற்ற இக்கலந்துரையாடலின்போது திரு சுந்தரலிங்கம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது ஆசிரியர்களாகிய உங்களது உள்ளம் வளரவேண்டுமெனில் நீங்கள் நல்ல மாணவர்களை வளர்க்க வேண்டும். நீங்கள் ஆசிரியர்களாகப் பதவியேற்ற காலம் தொட்டு மாணவர்கள் உங்கள் உள்ளத்தில் துள்ளிவியாட வேண்டும்.

ஆசிரியர்களாகிய நீங்கள் லீவு எடுப்பதைக் கூடியளவு குறைக்கவேண்டும். ஏனெனில் வருடத்தில் பாடசாலை நடப்பதே 160 நாட்கள். அதிலும் நீங்கள் 40 நாட்கள் லீவுஎடுத்துவிட்டால் மிஞ்சுவது 120 நாட்களாகும். மொத்தத்தில் 720 மணித்தியாலம். அதாவது 30 முழுநாட்களே ஒருவருடத்தில் கற்பிக்கப்படுகின்றது. ஆகையால் ஆசிரியர்களாகிய நீங்கள் லீவு எடுப்பதை அறவே நிறுத்திக்கொள்ளுங்கள். (107)

# "போராட்டத்தில் மக்களை இணைக்கவே கட்சி அமைத்தோம்"

(நாவற்குழி)

"நாம் தேர்தலுக்காககட்சி அமைக்கவில்லை தேர்தல் எமது நோக்கமல்ல. மக்களை எமது போராட்டத்தில் இணைத்து ஒரு வெகுஜன இயக்கமாக இருக்கவேண்டுமென்பதற்காகவே அமைக்கப்பட்டது."

இவ்வாறு தமிழீழ விடுதலைப் புலிகளின் மத்தியகுழு உறுப்பினர் திரு.செங்கதிர் பச்சிலைப் பள்ளி வட்ட அவை உறுப்பினர் தெரிவுக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

பச்சிலைப்பள்ளிப் பொறுப்பாளர் திரு. வ. செல்வராசா தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் திரு. செங்கதிர் தொடர்ந்துபேசுகையில்வட்ட அவை உறுப்பினர்களின் செயற்பாடுகள், பங்களிப்புகள் நடைமுறைகள் என்பவை பற்றி மிகவும் விரிவாக எடுத்துரைத்தார்.

இக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பாவும் கலந்து கொண்டார். (107)

# "ஆங்கிலம் எதிர்காலத்திற்கு படிக்கல்லாகும்"

(நாவற்குழி)

"ஆங்கிலக் கல்வியானது எதிர்கால வாழ்விற்கு ஒரு படிக்கல்லாக அமையும் ஆங்கிலம்கற்று ஆங்கிலத்தில் பாண்டித்தியம் அடைந்தால் பலவகையான நூல்களைக்கற்று அறிவை வளர்க்க முடியும்."

இவ்வாறு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற ஆங்கில தினப் போட்டியில் அதிபர் திரு. த. இராமலிங்கம் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

ஆசிரியை திருமதி நா. வார்த்தம்பி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் திரு. இராமலிங்கம் தொடர்ந்து பேசுகையில் ஆங்கில தினத்தை ஊக்குவிப்பதற்கு இவ்வாறான ஆங்கிலதின விழாக்களும், போட்டிகளும் அவசியமாகும் என்றும் இப்போட்டிகளில் கலந்து கொள்வதன் மூலம் மாணவர்களுக்கு ஆங்கில பாடத்தில் ஒரு சுயநம்பிக்கையும் ஏற்படும் என்றும் கூறினார்.

மாணவர்களுடைய ஆங்கிலப் பேச்சுக்கள், நாடகங்கள், பாட்டு என்பனவும் இடம் பெற்றன. (107)

## காரைநகர் இருளில்

(யாழ்ப்பாணம்)

காரைநகர் பகுதி கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக இருளில் மூழ்கியுள்ளது!

மின்சாரத்தடையை நிவர்த்தி செய்ய சம்பந்தப்பட்ட ஊழியர்கள் இதுவரை எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

கடந்த வாரம் இப்பகுதியில் கடற்படையினர் மேற்கொண்ட ஷெல் தாக்குதலில் வலந்தலை சந்தியில் மின்சார வயர்கள் சில துண்டிக்கப்பட்டன. எனினும் இதுபற்றி பொதுமக்கள் சம்பந்தப்பட்ட ஊழியர்களுக்கு புகார் தெரிவித்து வருகின்றபோதும் இதனை நிவர்த்திக்க அவர்கள் எதுவித நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

எரிபொருள் தட்டுப்பாடு கடுமையாக நிலவுவதால் இதனை உடனடியாகத்திருத்த நடவடிக்கை எடுக்குமாறு மின்சார சபை உ[illegible]களை மக்கள் கோரியுள்ளனர். (சி)

# 'பிரபா' மட்டத்தில் புலிகள் - இலங்கை அரசு பேச்சு நடக்க வேண்டும்!

## அமைச்சர் உபேந்திரா ஆலோசனை

(புதுடில்லி)



இலங்கைத் தீவில் நிகழ்ந்து வரும் இனப் பிரச்சனைக்கு இணக்கமான தீர்வுகாண்பதற்கு, இலங்கை அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையே மீண்டும் ஒரு பேச்சு வார்த்தை தொடங்கப்பட வேண்டும் என்று, மத்திய செய்தி ஒலிபரப்பு அமைச்சர் திரு பி. உப்பேந்திரா சென்னையில் ஆலோசனை கூறியுள்ளார்.

விடுதலைப் புலிகள் தலைவர் திரு. வே. பிரபாகரன் சம்பந்தப்பட்டவகையில், மிக உயரியநிலையில் இப் பேச்சு வார்த்தைகள் நடைபெற வேண்டும் என்று திரு. உப்பேந்திரா மேலும் தெரிவித்தார்

சட்டம், ஒழுங்குப் பிரச்சனையைத் தோற்றுவிக்கும் வகையில், தனது மண்ணில் போராளிகளுக்கிடையே நிகழக்கூடிய எந்தவகையான சண்டையையும், பாரதம், சகித்துக்கொள்ளவே முடியாது என்ற அரசின் நிலைப்பாட்டை அவர் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். (அ)

# நாட்டு நிலைமை அங்கும் இங்கும்

### சடலங்கள் எரிக்கப்பட்டன

சீனன்குடாவில் இலங்கை இராணுவத்தினால் அப்பாவி பொதுமக்கள் சுட்டுக்கொல்லப்பட்டனர். 14 பேரின் சடலங்கள் டயர்போட்டு எரிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

### 13 தமிழர் சுட்டுக்கொலை

கந்தளாயில் நேற்று முன் தினம் அரசபடையினர் 13 தமிழர்களை சுட்டுக்கொன்றனர்.

### தொடர்ந்து யுத்தம்

திருகோணமலை 3ம் கட்டையடி அனுராதபுரம் சந்திக் கருகாமையில் நேற்று முன் தினம் அரசபடைகளுக்கும், புலிகளுக்குமிடையில் ஆரம்பமான யுத்தம் தொடர்ந்து நடைபெறுகிறது.

### கஜுவத்த முகாம் வீழ்ச்சி

மன்னாரில் கஜுவத்த என்ற இடத்திலுள்ள இராணுவ முகாம்புலிகளின்பலத்ததாக்குதலுக்கு பின் வீழ்ச்சியடைந்தது.

### ஹெலி தாக்குதல்

மூதூர் பாரதிபுரத்தில் ஹெலி தாக்குதலுக்கு இரண்டு சிறுவர்கள் காயமடைந்தனர். ஹெலியிலிருந்து பெற்றோல் குண்டு வீசப்பட்டதால் ஒரு வீடு முற்றாகச் சேதமடைந்தது.

### 75 வீடுகள் தீக்கிரை

மட்டக்களப்பில் நேற்று முன் தினம் மயிலங்கருக்கு என்ற இடத்தில் 75 தமிழர்களின் வீடுகள் படையினரால் எரிக்கப்பட்டது. தமிழர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

### இளைஞர்கள் கைது

வாழைச்சேனை தேவாலயத்தில் அமைக்கப்பட்ட அகதிகள் முகாமில் தங்கியிருந்த இளைஞர்களைப் படையினர் கூட்டிச் சென்றுள்ளனர்.

### வீடுகள் எரிப்பு

கல்குடாப் பகுதியில் பல வீடுகள் தீமூட்டி எரிக்கப்பட்டன.

### நிற்கவிட்டு சுட்டனர்

காரைதீவு அகதி முகாமிற்குள் சென்ற அரசபடையினர் அங்கு 15 இளைஞர்களை நிறுத்தி வைத்து சுட்டதில் 6 பேர் துடிதுடித்து மாண்டனர். ஏனையோர் காயமடைந்தனர்.

### ஷெல் தாக்குதல்

வல்வை கடற்பிராந்தியத்திலிருந்து இலங்கை கடற்படையினர் மக்கள் குடியிருப்பு பகுதிகளை நோக்கி ஷெல் தாக்குதல் மேற்கொண்டு வருகின்றனர் பல வீடுகள் சேதமடைந்துள்ளன.

### படகுகள் சேதம்

வல்வை பகுதியில் ஹெலி தாக்குதலினால் கரையில் கட்டப்பட்ட நிலையில் நின்ற பல படகுகள் சேதமடைந்தன. வீடுகள் கடைகள் சேதமடைந்தன. இருவர் காயமடைந்தனர்.

### துப்பாக்கி சூட்டுக்கு பலி

யாழ் கோட்டை பகுதியில் நேற்று முன்தினம் வயோதிப மாது ஒருவர் படையினரின் துப்பாக்கி சூட்டுக்குப்பலியானார்.

### பீரங்கித் தாக்குதல்

காரைநகர் கடற்படை முகாமிலிருந்து தொடர்ந்து பீரங்கித் தாக்குதல் நடைபெறுவதையடுத்து அப்பகுதி

(3ம் பக்கம் பார்க்க)

# மயிலிட்டி நோயாளர் வெளியேற்றம்!

(யாழ்ப்பாணம்)

மயிலிட்டி மார்பு நோய் சிகிச்சை நிலையம் நோயாளர்கள் இன்றி வெறிச்சோடிக் காணப்படுகிறது.

ஏற்கனவே இங்கு இடம் பெற்ற ஹெலிகொப்டர் தாக்குதலையடுத்து நோயாளர்கள் பலர் வைத்தியசாலையை விட்டு வெளியேறியபோதும் மூன்று நோயாளர்கள் கடந்த வியாழக்கிழமை வரை தங்கியிருந்தனர்.

இவர்களுக்கான வைத்திய உதவிகள், உணவு வசதிகள் இல்லாதகாரணத்தாலும் இப்பகுதியில் நிலவும் பதற்ற நிலை காரணமாகவும் இவர்களும் வெளியேறினார்கள்.

இப்பகுதியில் இடம்பெற்ற ஹெலிகொப்டர் தாக்குதல்களினால் இந்த வைத்தியசாலையும்சேதமடைந்துள்ளதுகுறிப்பிடத்தக்கது.

# 600 பொலிஸார் பற்றி எவ்விதத் தகவலும் இல்லை

(கொழும்பு)

600 தமிழ் பொலிஸாரின் நிலைமைபற்றி எதுவும் தெரியவில்லை என பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இவர்கள் தங்கள் பகுதிகளில் பாதுகாப்பாக இருப்பார்கள் என நம்பப்படுகிறது.

இவர்களில் பலர் புதிதாக தெரிவு செய்யப்பட்டு வடகிழக்குக்கு [illegible]கள் எனக் கூறப்படுகிறது. மட்டக்களப்பு திருமலையை சேர்ந்த பல பொலிஸாரும் இதில் அடங்கியுள்ளனர்.

## அணைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாநகர சபைக்குட்பட்ட பகுதி மக்களின் பாதுகாப்பை முன்னிட்டு இரவு வேளையில் வீதியோர மின் விளக்குகள் அணைத்து வைக்கப்பட்டுள்ளதாக, மின்சாரப் பகுதியினர் தெரிவித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

''சிக்கனம் என்பது ஒருவர் பணத்தை எவ்வளவு குறைவாகச் செலவிடுகிறார் என்பதைப் பொறுத்த தல்ல. அதை அவர் எவ்வளவு உபயோகமாகச் செலவிடுகிறார் என்பதே ஆகும்.''

— ஆலிசன்ஸ் வெட்

# நமது நோக்கு

## நெருக்கடி வேளைகளும்.... கூட்டுறவுப் பணிகளும்....

இன்றைய காலப்பகுதியில், பொதுமக்களிடையே சில வேளைகளிற் பதற்றம் ஏற்படுகின்றது.

குறிப்பிட்ட சில இடங்களில் இடப்பெயர்ச்சி தவிர்க்கமுடியாதனவாகியும் விடுகிறது

இதன் விளைவுகளில் ஒன்று உணவுத்தட்டுப்பாடு;

தனியார் வர்த்தகர்களிற் பலர் மனிதாபிமானத்தோடு நடந்து, தமது வாடிக்கையாளர்களைத் திருப்திப்படுத்த முயற்சிக்கிறார்கள்.

தனியார் வாணிபம் என்றாலே இலாபம் பெற முயற்சித்தால்—இதைக் குறைகூறிக்கொண்டிருப்பதிற் பயனில்லை.

ஆனால், அறவழி அல்லாதவகையில், மக்களைத் துன்பப்படுத்தும் வகையிற் பெறும் கொள்ளை லாபம் தர்மமாகாது.

சில வர்த்தகர்கள், சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ளை இலாபம் பெற முயற்சிப்பது எவ்விதத்திலும் நியாயமாகாது.

இந்த வேளையில்தான், நுகர்வோர் கூட்டுறவின் அவசியத்தை மக்கள் உணரவேண்டும்.

தமக்குத் தேவையானவற்றை நியாய விலையிற் பெறுவதற்கும், சிறு கைத்தொழில் முயற்சிகளை ஆரம்பித்து உற்பத்தியைப் பெருக்கி, கிராம மக்களுக்கு வேலைவாய்ப்பைப் பெற்றுக் கொடுப்பதற்கும் கூட்டுறவு இயக்கம் பெரிதும் உதவக்கூடியது.

அந்த அமைப்பிலே குறைகள் இருக்கலாம்; ஊழல் மோசடிகள் காணப்படலாம். அதற்காக, அவற்றை நீக்க முற்படாது, ஒதுங்கி இருப்பதிற்பயனில்லை.

சமூகத்திலே உள்ள பொது நலம் பேணுவோர், இந்த அமைப்பைச் சீராக்கி, நல்வழிப்படுத்த முன் வரவேண்டும். அதற்கான முயற்சிகள் சில அண்மையிலே எடுக்கப்பட்டது வரவேற்கப்படவேண்டியதே.

நெருக்கடிகளை எதிர்நோக்கி, உணவுப் பொருட்களைத் திட்டமிட்டுச் சேமித்து வைத்து முறையான விநியோகத்தை மக்களுக்குச் செய்யக் கூட்டுறவு இயக்கப்பணியாளர்கள் முன் வரவேண்டும்.

ஏற்கனவே பல கூட்டுறவு இயக்கப் பணியாளர்கள் பொதுநலம் கருதிச் செய்த தொண்டுகளை மக்கள் மறப்பதற்கில்லை.

நாட்டிலே ஏற்பட்ட பல அரசியற், சமூக மாற்றங்களினால் சோர்வடைந்துவிட்ட கூட்டுறவாளர்கள், சோர்வு நீங்கிப் பொதுப் பணிகளில் மீண்டும் ஈடுபட வேண்டும்.

இலாபம் ஈட்டுவது கூட்டுறவின் பிரதான நோக்கமல்ல; உறுப்பினர்களின் தேவைகளுக்கு ஏற்பபொருள் விநியோகத்தைச் சீராக்குவதே நோக்கமாக அமைய வேண்டும்.

## "இலங்கையின் வடக்கு-கிழக்கில் இனப்படுகொலையை தடுக்கும் பொறுப்பு இந்தியாவுக்குண்டு

### பிரிட்டிஷ் பத்திரிகைகள் கருத்து

(லண்டன்)

இலங்கையில் வடக்கு-கிழக்கில் அரசபடைகள் மேற்கொண்டுவரும் இனப்படுகொலைகளைத் தடுக்கவேண்டிய முக்கிய பொறுப்பு இந்தியப் பிரதமர் திரு. வி. பி. சிங்கிற்கு இருப்பதாக லண்டன் பத்திரிகைகள் கருத்துதெரிவித்துள்ளன

'த பினான்ஸியல் ரைம்ஸ்', 'த கார்டியன்' உட்பட சில பத்திரிகைகள் இவ்வாறு தெரிவித்துள்ளன.

''இலங்கைத் தமிழர்களின் பாதுகாப்பிற்கு தாம் உறுதியளிப்பதாக இலங்கை ஜனாதிபதி, இந்தியப் பிரதமர் சிங்கிற்கு அளித்த உத்தரவாதத்தின் பேரிலேயே இந்தியப் படைகள் இலங்கையிலிருந்து முற்றாக வெளியேறின என்று இந்தியா தெரிவித்தது.

எனினும் இலங்கை அதன்படி செயற்படாது தமதுபடைகளுக்கு ஏற்பட்ட பெரும் இழப்பை ஈடுகட்டும் நோக்கில் அப்பாவி மக்களை, படுகொலை செய்கின்றது. ஆனாலும்இதை தட்டிக்கேட்கும் பொறுப்பு இந்தியப் பிரதமருக்கு உண்டு என்று மேற்படி பத்திரிகைகள்கருத்து வெளியிட்டுள்ளன;

'இன்டிபென்ரன்' நாளேடு ''கிழக்கிலங்கையில் அம்பாறை- மட்டக்களப்பு ஆகிய இடங்களை இராணுவம்தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளதாகக் கூறினாலும் கல்முனைப்பகுதியின்னமும்விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டிலேயே இருந்துவருகிறது. பாடசாலைகள், அகதிமுகாம்களும் தாக்கப்பட்டன. சிங்கள மக்கள் ஒருபுறமும் தமிழ் மக்கள் மறுபுறமும் ஒதுங்கிவிட்டனர்'' என்றும் கருத்து வெளியிட்டுள்ளது.

### பத்துநாள் யுத்தத்தில் அம்பாறை: 30,000, மட்டக்களப்பு: 40,000 அகதிகளாயினர்!

(கொழும்பு)

அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே தொடர்ந்து பத்துநாட்களாக இடம்பெற்ற மோதலில் மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சுமார் 40,000 பேரும், அம்பாறையிலிருந்து சுமார் 30,000 பேரும் அகதிகளாகி அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இப்பகுதிகளில் உணவுப் பொருட்களுக்கும்அத்தியாவசியப் பொருட்களுக்கும் தட்டுப்பாடு நிலவுவதனால், கொழும்பு வாழ் தமிழ் மக்கள் தமக்கு உடனடியாக உணவுப்பொருட்களை வழங்க நடவடிக்கை எடுக்கும்படி வேண்டுகோள் விடுத்துள்ளனர். (அ)

### யுத்தத்தை நிறுத்த இந்தியா கோரிக்கை

(சென்னை)

இலங்கை இராணுவத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே இடம்பெற்று வரும் மோதல்களை உடனடியாக நிறுத்தும்படி, இந்திய அரசு முதல் தடவையாக கோரிக்கை விடுத்துள்ளது.

இலங்கையின் நிலவரங்களை இந்திய அரசு ஆழ்ந்த கவலையுடன் கவனித்து வருவதாக இந்திய வெளியுறவுத் துறை உயர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

தமிழ் மக்களின் நியாயமான இலட்சியங்கள் இலங்கை அரசியல் சாசனத்தின் கட்டுக்கோப்புக்குள் தீர்த்து வைக்கக்கூடிய முறையில் வன்செயல்கள் கைவிடப்பட்டு ஜனநாயக வழிகள் நடைமுறைப் படுத்தப்பட வேண்டும் என அவ் உயர் அதிகாரி மேலும் கூறினார்.

இலங்கையில் இரசாயன ஆயுதங்கள் பயன்படுத்தப்படுகின்றன என்ற செய்தி மிகுந்த கவலை அளிப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இலங்கையில் நிகழ்ந்துவரும் சம்பவங்கள் பற்றி பிரதமர் வி. பி சிங்கை, தமிழக முதல்வர் உட்பட பல மாநில முதலமைச்சர்கள், அமைச்சர்கள் கலந்துரையாடியுள்ளனர். (அ)

### யாழ். செயலகம் நேற்று வழமைக்குத் திரும்பியது

[மானிப்பாய்]

யாழ். செயலகம் நேற்று வழமைபோல் செயல்பட்டது.

உயரதிகாரிகள்உட்பட கணிசமான அளவு ஊழியர்கள் கடமைக்கு சமுகமளித்திருந்தனர்.

போக்குவரத்துச்சேவை நடைபெறாதபோதிலும் சகல ஊழியர்களும் தூர இடங்களிலிருந்து சைக்கிள் மூலமாகவே அலுவலகம் வந்திருந்தனர். [71]

### தமிழ்ப் போராளி அலுவலகங்கள் சென்னையில் மூடப்பட்டன

(சென்னை)

இலங்கைத் தமிழ் போராளி இயக்கங்களின் அலுவலகங்கள் அனைத்தும் தமிழக அரச படையினரால் மூடப்பட்டு 'சீல்' வைக்கப்பட்டுள்ளது என்று தமிழக காவல் படையினர் அறிவித்துள்ளனர் (அ)

## இன்று இலங்கை நிர்வாகசேவை பரீட்சை வடக்கு - கிழக்கு பரீட்சார்த்திகளுக்கு அனுமதி அட்டை கிடைக்கவில்லை!

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண நிர்வாக சேவைக்காக இன்று கொழும்பில் நடைபெறவுள்ள எஸ். எல். ஏ. எஸ் பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் வடக்கு-கிழக்கு பகுதி பரீட்சார்த்திகளுக்கு இதுவரை கிடைக்கவில்லை.

வடக்கு-கிழக்கு மாகாண சபையில் சுமார் 150 வெற்றிடங்களை நிரப்ப 3,000ற்கும் மேற்பட்டோர் விண்ணப்பித்திருந்தனர். இப்பரீட்சை இன்று 23ம் திகதி கொழும்பில் நடைபெறுமென ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது.

இப்பகுதியில் கடந்த இரு வாரங்களாக இடம்பெற்று வரும் யுத்த நிலையை அடுத்து பரீட்சார்த்திகள் கொழும்பில் இன்று நடைபெறும் பரீட்சைக்குத் தோற்ற முடியாத இக்கட்டான நிலை ஏற்பட்டுள்ளது.

இதேவேளைஇப்பரீட்சையை வேறோர் தினத்தில் வடக்கு கிழக்கு பகுதியில் நடாத்த சம்பந்தப்பட்டவர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று பல பொது ஸ்தாபனங்களும்வலியுறுத்தியுள்ளன; (சி)

### அங்கும் இங்கும்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

மக்கள் வெளியேறி வருகின்றனர்.

#### தள்ளாடி முகாமிலிருந்து

மன்னார் தள்ளாடி முகாமிலிருந்து நாலுபக்கமும் தொடர்ச்சியாக ஷெல் தாக்குதல் நடைபெறுகிறது: அப்பகுதி மக்கள் பூநகரியூடாக தென்மராட்சிக்கு வந்துள்ளனர்.

#### பொருள்கள் இடமாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கடைகளிலிருந்து பொருள்கள் யாவும் அப்புறப்படுத்தப்பட்டு வருகின்றன. கடந்த 3 தினங்களாக மக்கள் பெருமளவில் பொருட்களை வாங்கி செல்கின்றனர்.

#### சைக்கிள் பாவனை அதிகரிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் தற்போதுநிலவிவரும் எரிபொருள் தட்டுப்பாட்டை அடுத்து வாகனப் போக்குவரத்துக்கள் மிகமிகக் குறைந்துள்ளது. நகரிலும், அதனை சுற்றியுள்ள பிரதேசங்களிலும் சைக்கிள்களையே கூடுதலாக காணமுடிகிறது.

#### பஸ் சேவை தொடர்ந்து ஸ்தம்பிதம்

யாழ். குடாநாட்டு பஸ் சேவைகள் முற்றாக ஸ்தம்பிதம் அடைந்திருந்தது. டீசல் இல்லாத காரணத்தினால் மட்டுப்படுத்தப்பட்ட சேவையை நடத்திவந்த வடபிராந்திய போக்குவரத்துச் சபை தனது கையிருப்பிலிருந்த டீசல் முடிவடைந்ததை அடுத்து சேவையை முற்றாக நிறுத்தி உள்ளது.

### மனித மூளையின் அபார சக்தி!

[புதுடில்லி]

நவீன முறையிலான புதிய கம்பியூட்டர்கள் கண்டுபிடிக்கப்படும் இந்நாளில், இயற்கையாக உருவாக்கப்பட்ட மனித மூளை என்னும் கம்பியூட்டரின் வியக்கத்தக்க ஆற்றல்களை மதிப்பதில்லை.

ஏழு தொன் எடையுள்ள 'கிரே கம்பியூட்டர்' ஒரு விநாடிக்கு 40 கோடி வகையான கணக்கீடுகளைச் செய்கின்றது என்றால் மூன்றுறாத்தல் எடையுள்ள மனிதமூளை என்னும் கம்பியூட்டர் 20 லட்சம் கோடி வகையான கணக்கீடுகளை ஒரு விநாடிக்குள் செய்கின்றது என்று சிம்லாவிலுள்ள நிர்வாகிகள் வல்லுநர் குழுஒன்று ஆராய்ந்து கண்டுள்ளது.

லண்டனில்

### யோகசங்கரியின் இறுதிச்சடங்கு

(சென்னை)

சென்னையில் 16 பேர் படுகொலையில் பலியான யாழ். மாவட்ட எம். பி. யோகசங்கரியின் இறுதிச் சடங்குகள் லண்டனில் இடம்பெறவிருப்பதால், அவரது சடலம் லண்டனுக்கு கொண்டுசெல்ல நேற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டன; (அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கடலில்மீன்பிடிக்கத்தடையா?

# கடற்றெழிலாளர் பாதிப்பு!

[பண்டத்தரிப்பு]

கடலில் மீன் பிடிக்கவேண்டாமென்று கடலில் மீன்பிடித்துக்கொண்டிருந்த கடற்றொழிலாளர்களை கடற்படையினர் எச்சரித்த சம்பவம் மாதகல் கடலில் நிகழ்ந்துள்ளது.

வியாழக்கிழமை முற்பகல் இயந்திரவிசைப்படகு ஒன்றில் மாதகல் கடற்பகுதிக்கு வந்த மேற்படி சிறீலங்கா கடற்படையினர். கடற்கரைக்கு மிகவும் சமீபமாக படகைச் செலுத்திவந்ததாகவும், இவர்களைக் கண்டு மிகவும் அச்சமடைந்த கடற்றொழிலாளர்கள் கரையை நோக்கிச்செல்ல முற்பட்டபோது கடற்படையினர், ''இனிமேல கடலில் மீன்பிடிக்க வரக்கூடாது'' என்று எச்சரித்துவிட்டுச்சென்றதாகவும் இதுபற்றி தெரிவிக்கப்படுகின்றது.

இச்சம்பவத்தை அடுத்து கடலில் மீன்பிடிக்க எவரும் செல்லவில்லை. [72]

## வைத்தியசாலைகளில் நோயாளர் அதிகரிப்பு

[பண்டத்தரிப்பு]

சங்கானை அரசினர் வைத்தியசாலை, பண்டத்தரிப்பு அரசினர் வைத்தியசாலை, வட்டுக்கோட்டை அரசினர் வைத்தியசாலை ஆகிய வைத்தியசாலைகளில் கடந்த சில தினங்களாக நோயாளர்களின் தொகை மிகவும் அதிகரித்துள்ளது.

யாழ் அரசினர் வைத்தியசாலை மூடப்பட்டிருந்தாலும் தெல்லிப்பழை அரசாங்க வைத்தியசாலைப் பகுதியில் பதட்டநிலை ஏற்பட்டுள்ளதாலும் நோயாளர்கள் இந்த வைத்தியசாலைகளையே சிகிச்சைக்காக நாடிச் செல்கின்றனர்.

வலி வடக்கு பிரதேசத்திலிருந்தும், காரைநகர் பகுதியிலிருந்தும் பெருந்தொகையானவர்கள் அகதிகளாக இப்பகுதிகளில் வந்திருப்பதாலும் இந்த வைத்தியசாலைகளில் நோயாளர்கள் தொகை அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது. (72)

## கிளிநொச்சி பஸ் வந்தது

(யாழ்ப்பாணம்)

கிளிநொச்சி டிப்போவிற்குச் சொந்தமான பஸ் ஒன்று நேற்று யாழ்ப்பாணம் வந்து கிளிநொச்சிக்குத் திரும்பியது.

இந்த பஸ்ஸில் மாங்குளத்திலிருந்து இடம்பெயர்ந்த மக்கள் பலர் வந்திருந்தனர்.

(153)

# கிழக்கில் நடந்த சண்டையில்

## ஆயிரத்துக்கு அதிகமானோர் பலி

(கொழும்பு)

''விடுதலைப் புலிகள் கட்டுப்பாட்டில் இருந்து கிழக்கு மாகாணம் விடுவிக்கப்பட்டாலும் தொடர்ந்து விடுதலைப் புலிகளின் தாக்குதல்களில் இருந்து தப்பிப் பிழைப்பது கடினம்'' என்று இலங்கை இராணுவத் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக பி. பி. ஸி. கூறியது.

திருமலை, அம்பாறை, மட்டக்களப்புப் பகுதிகளில் முக்கிய சண்டை முடிந்துவிட்டாலும், பல்லாயிரக்கணக்கான போராளிகள் காடுகளுக்குள் மறைந்துவிட்டதாகவும் அவர்களை அங்கிருந்து அகற்றுவது கடினமாக இருக்குமென்று இராணுவத்தினர் ஒப்புக்கொண்டுள்ளனர்.

இந்த உள்நாட்டுப் போரில் குறைந்தது 1,000க்கு மேற்பட்டோர் கொல்லப்பட்டுள்ளதாக அரச வட்டாரங்களே ஒத்துக்கொண்டுள்ளன. பொதுமக்கள் பலர் இதில் அடங்குவர் என்றும் பி. பி. ஸி. செய்திகள் தெரிவித்தன. (அ)

## மன்னாரில் கடும் மோதல்

(யாழ்ப்பாணம்)

மன்னாரில் புலிகளுக்கும், அரச படையினருக்கு மிடையில் கடும் மோதல் நடைபெற்று வருகிறது.

## இடமாற்ற ஏற்பாடு

(ஒரிஸா)

ஒரிஸாவில் அகதிகளாக தங்கியுள்ள 400க்கும் மேற்பட்டோரின் உயிருக்குஆபத்து ஏற்படலாம் என்ற அச்சத்தில் அவர்களை வேறு இடங்களுக்கு மாற்றுவதற்கு ஒரிஸா அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது. (அ)

# 2000 அகதிகளுக்கு

## செஞ்சிலுவைச்சங்கம் உதவி

(யாழ்ப்பாணம்)

மூளாய் கிராம அபிவிருத்தி சங்கம், சங்கானை சைவப்பிரகாசவித்தியாசாலை. தொல்புரம் அம்மன் கோயில் ஆகியவற்றில் தங்கியுள்ள இடம்பெயர்ந்த மக்களுக்கு உணவு, உடை, மருத்துவவசதிகளை செய்வதற்கு யாழ். செஞ்சிலுவைச் சங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இம்முகாம்களில் ஐநூறு குடும்பங்களைச் சேர்ந்த இரண்டாயிரம் பேர் இடம்பெயர்ந்து அகதிகளாக இருப்பது குறிப்பிடத்தக்கது. (153)

## யாழ். பஸ் நிலையம் நல்லூரில் இயங்குகிறது

(யாழ்ப்பாணம்)

யாழ். நகர்ப் பகுதியில் நிலவிய பதற்றத்தைத் தொடர்ந்து யாழ். பஸ் சேவை நிலையம் நல்லூரில் தற்போது இயங்கி வருகிறது.

நல்லூர் கந்தசுவாமி கோயில் முன்றலில் இந்த பஸ் நிலையம் இயங்கி வருகிறது.

தனியார் மினிபஸ்கள், ஓட்டோக்கள், டாக்ஸி உட்பட பல தனியார் வாகனங்கள் இந்த பஸ் நிலையத்தில் தரித்து நிற்கின்றன.

இதேவேளை நேற்றும் வட பிராந்திய போக்குவரத்துச் சபை பஸ் எதுவும் போக்குவரத்துச் சேவையில் ஈடுபடவில்லை. (153)

## காரைநகர், காவலூரில்

# தினம் தினம் நடக்கும் ஷெல், பீரங்கித் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

காரைநகர்கடற்படை முகாமிலிருந்து தினமும் சில மணி நேரம் குடியிருப்பு பகுதிகளை நோக்கி ஷெல், பீரங்கிதாக்குதல்கள் நடாத்தப்பட்டுவருகிறது.

கடந்த ஒருவாரகாலமாக காரைநகர், ஊர்காவற்றுறை பகுதிகளில் இத்தாக்குதல்கள் நடாத்தப்பட்டு வருகிறது.

கடற்படை முகாமை அண்மித்துள்ள வீடுகள்மீது பீரங்கித் தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டு வீடுகள் பலத்தசேதங்களுக்குட்படுத்தப்பட்டும் வருகிறது.

# மாங்குளத்தில் தொடர்ந்து பொம்மர் தாக்குதல்!

(யாழ்ப்பாணம்)

மாங்குளத்தில் தொடர்ந்து ஐந்தாவது நாளாக நேற்றும் பொம்மர் தாக்குதல் இடம் பெற்றது.

இத்தாக்குதலினால் வர்த்தக நிலையங்கள், வீடுகள் அரச கட்டடங்கள் யாவும் பலத்த சேதமடைந்தன.

பொதுமக்கள் ஏற்கனவே இடம்பெயர்ந்த காரணத்தால் உயிர்ச்சேதம் எதுவும் நிகழவில்லை.

துணுக்காய், வவுனிக்குளம் போன்ற பகுதிகளில் மாங்குளம் மக்கள் இடம்பெயர்ந்திருப்பது குறிப்பிடத்தக்கது. (153)

## புற்றுநோயைத் தவிர்க்க இப்படியும் ஒரு வழி

(நியூயோர்க்)

மாமிச உணவைக்காட்டிலும் காய்கறிகளை அதிகம் உண்பதால் தேக ஆரோக்கியத்துக்கு அதிக நன்மை உண்டாகும் என்று விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர்.

குறிப்பாக 'ஹோலிபிளவர்' பூண்டு, வெங்காயம் போன்றவைகளை அதிகமாக வாங்கி உண்டால் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு மிகக் குறைவாகவுள்ளது என்று விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

நியூயோர்க்கிலுள்ள ஹார்மோன்கள் பற்றிய ஆய்வில் ஈடுபட்டுள்ள இரண்டு விஞ்ஞானிகள் தேசிய புற்றுநோய் நிலையத்திலிருந்து வெளியான பத்திரிகையில் இவ்வாறு தெரிவித்துள்ளனர். (அ)

## சுகாதார சாரதிகள் சங்க தலைவரின் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண சுகாதார சாரதிகள் சங்க உறுப்பினர்கள் அனைவரும் நெருக்கடியான இவ்வேளைகளில் தங்கள் பணியை மேற்கொள்ளுமாறுமேற்படி சங்கத் தலைவர் திரு. செல்லையா உருத்திரா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இக்கட்டான கஷ்டத்திற்கு உள்ளாகியிருக்கும் மக்களுக்கு உங்கள் பணி பெரும் உதவியாக இருக்கும். ஆகவே உங்கள் சேவையை மக்களுக்கு எப்பொழுதும் வழங்குவீரென எதிர்பார்க்கிறேன் என்றும் அவர் இவ்வேண்டுகோளில் தெரிவித்துள்ளார். (153)

# பாதை மாறிச் செல்லும் யாழ்-கொழும்பு பஸ்கள்

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரிலிருந்து ஒரு சில தனியார் பஸ்கள் கொழும்புக்குச் சென்று திரும்புகின்றன. தனியார் பஸ் ஊழியர் ஒருவர் இது சம்பந்தமாக தகவல் தருகையில்; ''நாம் வழக்கமாக கொழும்புக்குச் செல்லும் பாதை வழியாக செல்லாமல் பாதுகாப்பான பாதைகள் ஊடாகவே செல்லுகின்றோம்.

''யாழ். நகரிலிருந்து நாம் புறப்பட்டு, பூநகரி- சங்குப்பிட்டி பாதையூடாக முருங்கன் திருக்கேதீஸ்வரம் சந்தியை அடைந்து அடம்பன் ஊடாக முருங்கன், மடு செட்டிகுளம் பாதையால் மதவாச்சியை அடைந்து அங்கிருந்து நேராக கொழும்புக்குச் செல்லுகின்றோம். இவை தவிர, எரிபொருள் பெறுவதே எமக்கு பெரும் பிரச்சனையாக இருக்கிறது. இது போன்ற பல சிரமங்களின் மத்தியிலேயே அத்தியாவசியமாக கொழும்புக்குச் செல்ல வேண்டிய பிரயாணிகளை ஏற்றிச் செல்லுகின்றோம்'' என்று தெரிவித்தார்.

இன்றைய காலகட்டத்தில் நாம் கொள்ளை லாபம் அடிக்கும் நோக்குடன் இச் சேவையை நடத்தி பொது மக்களை ஆபத்தில் சிக்கவைக்க வைப்பது எமது நோக்கமல்ல ஆனால் எமது சேவையை சிலர் துஷ்பிரயோகம் செய்வது வருந்தத்தக்கது என்றும் அவர் கூறினர். (வ)

## அடையாள அட்டை முக்கியமாகிறது

[யாழ்ப்பாணம்]

ஆனையிறவு தடுப்புமுகாம் வழியாக செல்பவர்களில் அடையாள அட்டை இல்லாதவர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டுவருகிறார்கள்.

இளைஞர்கள் முதியோர்கள், பெண்கள் என்ற வேறுபாடின்றி அனைவரும் எச்சரிக்கை செய்யப்பட்டுவருகிறார்கள்.

[153]

## உணவுப்பொருள் விநியோகம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு பல நோக்கு கூட்டுறவுச் சங்கம் கிளைகளுக்கு ஊடாக பங்கீட்டு அடிப்படையில் உணவுப் பொருட்களை வழங்கி வருகிறது.

பங்கீட்டு அட்டையொன்றுக்கு மூன்று கிலோ வெள்ளைப்பச்சை அரிசி, இரண்டு கிலோ குத்தரிசி, ஒரு கிலோ சீனி என்ற அடிப்படையில் உணவுப் பொருட்களை இவ்வாரம் தொடக்கம் வழங்கி வருகின்றது.

சங்கக் களஞ்சியத்தில் கையிருப்பு முடிந்து விட்டதாலும், காங்கேசன்துறையிலுள்ள உணவுக் களஞ்சியத்தில் மாவை எடுத்துக்கொண்டு வருவதிலுள்ள கஷ்டங்களினலும் மா விநியோகம் நடைபெறவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

[புதுடில்லி]

மாலைதீவுஅரசின் அழைப்பை ஏற்று பாரதப் பிரதமர் திரு. வி. பி. சிங் மூன்று நாள் விஜயம் மேற்கொண்டு மாலைதீவுக்குச் சென்றுள்ளார். [அ]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 23-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org